
ஒரு யூனிட் மின்சாரம் ரூ.35க்கு கொள்முதல் செய்வதால் ரூ.1 லட்சம் கோடி நிதிச்சுமை!

மின்வாரியத்துக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்படும்!

சென்னை, அக். 16 -

தமிழகத்தில் கடந்த மே மாதம் த.வெ.க. ஆட்சி அமைத்ததில் இருந்து தமிழக மக்கள் மின்வெட்டை சந்தித்து வருகின்றனர். தொடர்ந்து மின் தேவையை சமாளிக்க தமிழக அரசு வெளிச்சந்தையில் இருந்து 4,500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. ஒரு யூனிட் மின்சாரத்துக்கு ரூ.31.99 முதல் ரூ.37 வரை விலை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வெளியாகி யுள்ள தகவல்கள் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளன. சராசரியாக யூனிட்டுக்கு ரூ.35க்கு அதிக விலையில் மின்சாரம் வாங்குவதால் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி வரை நிதிச்சுமை ஏற்படும் என்ற தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், திட்டமிட்டே அதிக விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ய தமிழக அரசு முயற்சி செய்கிறதா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் பெரும் விமர்சனத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வரை சீரான மின்விநியோகம் இருந்த தாகக் கூறப்படும் நிலையில், மே மாதம் முதல் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. இதனால், வீடுகளில் அன்றாட பணிகள் பாதிக்கப்படுவதுடன் சிறு கடைகள், உணவகங்கள், பட்டறைகள் மற்றும் தொழில் நிறுவனங்களும் பாதிப்பைச் சந்திக்கின்றன. பல நகரங்களில் மறியல்



போராட்டங்கள் நடந்தன. கிராமங்களில் குறைந்தழுத்த மின் விநியோகத்தால் மோட்டார்கள் பழுதடைந்தன. இதனால் விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட் டது. இத்தகைய சூழலில், மின் தட்டுப் பாட்டுக்கான காரணம் என்ன, தேவை யான மின்சாரத்தை முன்கூட்டியே திட்டமிட்டு கொள்முதல் செய்ய ஏன் நடவ டிக்கை எடுக்கப்படவில்லை என்ற கேள் விகள் எழுந்துள்ளன.

தற்போது 4,500 மெகாவாட் மின்சா ரம் கொள்முதல் செய்வது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அக்டோபர் மாத தேவைக்காக 3,000 மெகாவாட் மின்சாரம் வாங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டதாகவும், 2027ம் ஆண்டு கோடைகால தேவைக்காக 2,000 முதல் 3,200 மெகாவாட் வரை கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் கூறப்படுகிறது. இந்த திட்டங்கள் தனித்தனி டெண்டர்களா அல்லது ஒரே கொள்முதல் திட்டத்தின் வெவ்வேறு கட் டங்களா என்பது குறித்து தெளிவான விவரங்கள் மின்வாரியம் சார்பில் வெளி யிடப்படவில்லை. எந்த நிறுவனங்களிடம் இருந்து மின்சாரம் வாங்கப்படுகிறது, ஒவ்வொரு நிறுவனத்துக்கும் நிர்ண யிக் கப்பட்ட விலை என்ன, ஒப்பந்த காலம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பன போன்ற விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என சமூக ஆர்வ லர்கள் வலியுறுத்துகின்றனர்.

4500 மெகாவாட் மின்சாரத்தை ரூ.37க்கு கொள்ளுதல் செய்தால், ஆண் டுக்கு ஒரு லட்சம் கோடி நிதிச்சுமை ஏற்ப டும் என்று கூறப்படுகிறது. முந்தைய ஆட் சியில் மேற்கொள்ளப்பட்ட மின்சார கொள்முதல் ஒப்பந்தங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளனவா, அவற் றின் காலக்கெடு எப்போது முடிவடை கிறது, அவை ரத்து செய்யப்பட்டிருந்தால் அதற்கான காரணம் என்ன, புதிய டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளதா என் பதை மின்துறை அமைச்சர் வெளிப்ப டையாக தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்து வருகிறது. மின் வாரியத்தின் செலவுகள் அதிகரித்தால், அரசுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படலாம் அல்லது மின்வாரியத்தின் கடன் சுமை உயரக்கூடும். இதன் தாக்கம் தொழில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவு மற் றும் பொதுமக்களின் வாழ்க்கைச் செலவி லும் எதிரொலிக்க வாய்ப்புள்ளது.

இதனால், மின்சார கொள்முதலில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய் வதுடன், குறைந்த விலையில் மின்சா ரம் பெறுவதற்கான வழிகளையும் அரசு ஆராய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதி கரித்துள்ளது. தொடர்ந்து மின்துறை தொடர்பாக பல்வேறு கேள்விகள் எழுந்து வரும் நிலையில், முதல்வர் விஜய் தலை மையிலான தமிழக அரசு இந்த விவகா ரத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்போ கிறது என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மின்தட்டுப்பாட்டால் மக்கள் அவதிப்படும் நிலையில், அதிக விலைக்கு மின்சாரம் வாங்க வேண்டிய அவசியம் என்ன, கடந்த ஆட்சியின் டெண்டர்கள் என்ன வாயின, திட்டமிட்டே அதிக விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளதா என்ற கேள்வி களுக்கு அரசு அளிக்கும் விளக்கத்தை மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

மின்தேவையை கணிக்க தவறிய தால் அதிக விலைக்கு மின்சாரம் வாங் கும் நிலை

தமிழகத்தில் மின்சாரத் தேவை குறையும் என கணித்து, மின்வாரியம் தாமதமாக ஒப்பந்த புள்ளிகளைக் கோரி யதால் அதிக விலைக்கு மின்சாரம் வாங் கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆந்திரபிரதே சம் இதே காலகட்டத்திற்காக 150 மெகாவாட் மின்சாரத்தை யூனிட்டுக்கு ரூ.16 முதல் ரூ.20 வரை விலையில் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது. அக்டோ பர் மாத மின்தேவைக்கான ஒப்பந் தத்தை செப்டம்பர் 9ம் தேதியே இறுதி செய்த நிலையில், தமிழக மின்வாரியம் அக்டோபர் 12 முதல் 31ம் தேதி வரையி லான தேவைக்காக ஒரு வாரத்திற்கு முன்புதான் ஒப்பந்தப புள்ளிகளைக் கோரி உள்ளது.

மாத வாரியாக பட்டியல்!

மே முதல் அக்டோபர் வரை மின் வாரியம் வெளியிட்ட மொத்த டெண்டர் களின் எண்ணிக்கை, மின்சார கொள்மு தல் விலை, அதனால் ஏற்படும் செலவு குறித்த முழுமையான மாத வாரியாக பட்டியலை அரசு வெளிப்படையாக வெளி யிட வேண்டும். மின்சார கொள்முதல் டெண்டர்களையும், மின்மாற்றிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான டெண்டர்களையும் தனித்தனியாக வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

த.வெ.க. ஆட்சியில் மின்வெட்டு தீராத பிரச்சினையாக இருக்கிறது!

இந்தியாவிலேயே யாரும் வாங்காத விலைக்கு மின்சாரத்தை வாங்குவதா?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம் கேள்வி!

கீழ்வேளூர், அக். 16 -

மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ. சண்மு கம் நாகப்பட்டினத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: -

த.வெ.க. ஆட்சி பொறுப்புக்கு வந்த காலத்திலிருந்து மின் வெட்டு ஒரு தீராத பிரச் னையாக தொடர்கிறது. எப்போது மின்சாரம் போகும், எப்போது திரும்ப வரும் என்று தெரியாத அளவுக்கு ஒரு கடுமையான மின் தட் டுப்பாடு உள்ளது. தமிழ் நாடு அரசாங்கம் முடிவு எடுத்து ஒரு யூனிட் மின் சாரம் 35 ரூபாய் என்று ஒரு ஒப்பந்தத்தை



போட்டிருப்பதாக செய் திகள் என்பது வெளி வந் திருக்கிறது. அநேகமாக இந்தியாவில் எந்த மாநி லத்திலும் இவ்வளவு அதிகமான விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கியதாக எந்த செய் தியும் இல்லை.

35 ரூபாய் ஒரு யூனிட் என்பது மிக மிக அதிக மானது. கடந்த தி.மு.க. ஆட்சியில் கரப்ஷன் இருக்கிறது என்றெல் லாம் குற்றம்சாட்டி, இப்போது இருக்கிற முதல்வர் பிரச்சாரம் செய்தார்.

ஆனால் இப்போது அதைவிட மூன்று மடங்கு 35 ரூபாய் கொடுத்து மின்சாரத்தை கொள்மு தல் செய்திருப்பது என் பது ஏற்கத்தக்கது அல்ல.. ஞ ா ன ே ஷ் கு ம ா ர ை பதவி நீக்கம் செய்ய வேண்டும். எஸ்.ஐ.ஆர். ந ட வ டி க் க ை க ள ை நிறுத்த வேண்டும். நீக் கப்பட்ட வாக்காளர் களை மீண்டும் சேர்க்க வேண்டும். அதே மாதிரி தேர்தல் ஆணையர் நியமனத்தில் தலைமை நீதிபதியை இணைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வற்பு றுத்தி வரும் 15ம் தேதி சென்னையில் பிரமாண் டமான ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

ஞானேஷ் குமாரை தலைமை தேர்தல் ஆணையர் பதவியில் இருந்து நீக்குகிற வரை இந்த போராட்டம் தமிழ்நாடு மட்டுமல்ல நாடு முழுவதும் தொடர்ந்து நடைபெ றும். ஒத்த கருத்துடைய அனைவரும் இந்த பே ர ா ட் ட த் தி ல் இணைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

யூனிட் மின்சாரம் ரூ.35க்கு கொள்முதல் செய்வது யாரிடம் கமிஷன் வாங்க?

சீமான் கேள்வி!

சென்னை, அக். 16 -

நாம் தமிழர் கட்சி யின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் நேற்று முன்தினம் வெளி யிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: -

தமிழ்நாட்டில் நில வும் மின்பற்றாக்குறை யைச் சமாளிப்பதற்காக தனியார் நிறுவனங்களிட மிருந்து ஓர் அலகு மின் சாரத்தை சுமார் ரூ.35க்கு கொள்முதல் செய்ய த.வெ.க. அரசு முடிவெ டுத்துள்ளது அதிர்ச்சி யளிக்கிறது. அரசின் சொந்த மின் உற்பத்தி திட்டங்களை வலுப்ப டுத்தாமல், அதிக விலை கொடுத்து தனியாரிடம் மின் கொள்முதல் செய் வது வன்மையான கண் டனத்திற்குரியது.

கடந்த சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின் போது, மின் உற்பத்தி யில் கவனம் செலுத்தா மல் கையூட்டுக்காக தி.மு.க. அரசு தனியாரி டம் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதாக குற்றஞ் சாட்டிய முதலமைச்சர் விஜய், இன்று தனது ஆட்சியில் அதைவிட அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவது யாரிடம் கையூட்டு (கமி ஷன்) வாங்க? அவசர தேவையைக் காரண மாக்கி எந்த விலையிலும் மின்சாரம் வாங்கலாம் என்பதை ஒருபோதும் ஏற்க முடியாது. குறைந்த செலவில் மின்சாரம் பெறுவதற்கான மாற்று வாய்ப்புகள் ஆராயப் பட்டனவா? கொள்மு தல் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது?

எந்தெந்த நிறுவனங் களிடமிருந்து, எவ்வளவு மின்சாரம், எத்தனை நாட்களுக்கு வாங்கப்படு கிறது? இதனால் ஏற்ப டும் மொத்தக் கூடுதல் செலவு எவ்வளவு? ஒப் பந்தங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களை யும் தூயசக்தி என்று தன் னைத்தானே கூறிக் கொள்ளும் தவெக அரசு வெ ளி ப் ப ட ை யா க ப் பொதுவெளியில் அறி விக்க வேண்டும். இந்த கூடுதல் செலவை எப்ப டியாயினும் நாளை மின் கட்டண உயர்வாக மக் கள் தலையில் சுமத்தப் போகிறீர்கள்.

ஆக அரசின் திட்டமி டல் குறைபாட்டிற்காக எளிய மக்களும் விவசா யிகளும் சிறு தொழில்மு னைவோரும் கூடுதல் விலை கொடுக்க வேண் டுமா? அதிக விலையி லான மின் கொள்முதல் முடிவை உடனடியாக மறுஆய்வு செய்து, தடை யற்ற மின்சாரத்தை குறைந்த செலவில் வழங் குவதற்கான நடவடிக் கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்வ தோடு, கூடுதல் கொள் முதல் செலவை மக்கள் மீது சுமத்தக்கூடாது என்றும் வலியுறுத்துகி றேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ரூ.2,000 முதல் ரூ.2,500 வரை கட்டணம் செலுத்தி வந்தவர்களுக்கு ரூ.20 ஆயிரத்திற்கு மேல் கட்டணம்!

சேலத்தில் மின் அலுவலகம் முற்றுகை – பொதுமக்கள் திரண்டு சரமாரி புகார்!

சேலம், அக். 16 -

சேலம் அஸ்தம்பட்டி பகுதி யில் வசிப்போருக்கு ரூ.20 ஆயி ரத்திற்கு மேல் மின் கட்டணம் வந்ததால், உதவி பொறியாளர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர். தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் வீடு களுக்கு பயன்படுத்தப்படும் மின் சாரத்திற்கு 2 மாதங்களுக்கு ஒரு முறை, மின்மீட்டரை கணக் கீட்டு மின் கட்டணம் நிர்ண யித்து வசூலிக்கின்றனர். த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின் கடந்த 4 மாதமாக பெரும்பாலான மின் வாடிக்கையாளர்களுக்கு மின் கட்டணம் பன்மடங்கு அதிக மாக வசூலிக்கப்படுகிறது.

இக்கட்டண அதிகரிப்பு தொடர்பாக மாநிலம் முழுவதும் தொடர் புகார்கள் எழுந்துள்ளது. இந்தவகையில், சேலம் அஸ்தம் பட்டி பகுதியில் உள்ள வீடுகளில் கடந்த சில நாட்களுக்கு முன் மின் கணக்கீட்டு பணி நடந்தது. அதில், பலரது வீட்டிற்கு மின் கட்டணமாக ரூ.10 ஆயிரம் முதல் ரூ.20 வரையில் வந்துள்ளது. இதனை பார்த்து மக்கள் கடும் அதிர்ச்சியடைந்தனர். நேற்று முன்தினம், 50க்கும் மேற்பட் டோர் அஸ்தம்பட்டி மின்வாரிய உதவி பொறியாளர் அலுவல கத்தை முற்றுகையிட்டனர்.

அப்போது பொதுமக்கள் கூறுகையில், "நாங்கள் இதுவரை அதிகப்பட்சமாக ரூ.2,000 முதல்



ரூ.2,500 வரை மின் கட்டணம் செலுத்தி வந்தோம். ஆனால் தற்போது ரூ.10,000, ரூ.15,000, ரூ.20,000 கட்ட வேண்டும் என கணக்கிட்டுள்ளனர். 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கி வந்த நிலையில், தற்போது த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் 200 யூனிட் இலவச மின்சாரம் என்றனர். ஆனால், கட்டணம் மட்டும் அப்போது வந்ததை விட பன் மடங்கு அதிகமாக வந்திருக்கி றது. இது மிகப்பெரிய மோசடி யாகும்.

மின்வாரிய அதிகாரிகள் தவ றாக கணக்கீடு செய்து, அதிக கட் டணம் விதிக்கின்றனர். பயன் படுத்தாத மின்சாரத்திற்கு பணம் வசூலிக்கின்றனர்," என்றனர். முற்றுகையில் ஈடுபட்டவர்களி டம் உதவி பொறியாளர் மஞ்சு பிரியதர்ஷினி பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது அவரி டம், தங்கள் வீடுகளுக்கு இது நாள் வரையில் இவ்வளவு கட்ட ணம் வந்ததே கிடையாது. ஏன் இப்படி ரூ.20ஆயிரத்திற்கு மேல் கட்டணம் வருகிறது, எனக் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து வீடுகள் தோறும் கணக்கீடு செய்யும் ரீடிங் மேன் கன்னியப்பன் மற்றும் ரிவென்யூ சூப்பர்வைசர் கீதா ஆகியோர் மீது நடவடிக்கை எடுப்பதாக வும், கூடுதல் மின் கட்டணம் குறித்து விசாரணை நடத்தப்ப டும் என்றும் உதவி பொறியாளர் தெரிவித்தார். தொடர்ந்து அனை வரிடமும் புகார் மனுக்களை பெற்றுக்கொண்டார். தவறாக கணக்கிட்டுள்ள மின் கட்ட ணத்தை குறைக்காவிட்டால், கட்டணம் செலுத்தமாட்டோம் என பொதுமக்கள் கூறிவிட்டு, அங்கிருந்து கலைந்துச் சென்ற னர்.